**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 207/2008**
**நாள்.06.01.2024**
**வா.சா.1- சுப்பையா**

**3 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணையின் தொடர்ச்சி**

தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் சம்பந்தமாக 18.04.2011ம் தேதி SRR Projects private limited, Hyderabad நிறுவனத்திற்கு நான் தான் 3 கிரையப்பத்திரங்கள் எழுதினேன் என்றால் தாவா சொத்துக்கள் சம்பந்தமாக பத்திரம் எழுதவில்லை. வேறு சொத்துக்களுக்குதான் கிரையப்பத்திரம் எழுதினேன். தாவா சொத்துக்கள் மேற்படி 18.04.2011ம் தேதி எழுதிய கிரையப்பத்திரங்களில் கட்டுப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி பத்திரத்தில் கட்டுப்பட்ட சொத்துக்கள் சம்பந்தமாக வேடசந்தூர் சார்பு நீதிமன்றத்தில் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வழக்கு முதலில் திண்டுக்கல் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.153/2010 பாக வழக்காக தாக்கல் செய்யப்பட்டு பின்னர் வேடசந்தூர் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு அசல் வழக்கு எண்.18/2019 ஆக எண்ணிடப்பட்டு வாதியின் வருகையின்மை காரணமாக தள்ளுபடி செய்யப்பட்டு வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க மனு தாக்கல் செய்து அது நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படுவது வேடசந்தூர் சார்பு நீதிமன்றத்திலிருந்து சார்பு செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.153/2010 நான் தாக்கல் செய்த வழக்குரை என்றால் சரிதான். மேற்படி **அசல் வழக்கு எண். 153/2010 ன் பிராது பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி அசல் வழக்கு எண்.153/2010ல் பாலகிருஷ்ணன் குடும்பத்திற்குள் கடந்த 29.04.2002ம் தேதி ஏற்பட்ட பதிவு செய்யப்பட்ட பாக பத்திரம் செல்லத்தக்கதல்ல என பரிகாரம் எதுவும் கேட்கப்படவில்லை என்றால் சரிதான். சர்வே எண் 1398/2, சர்வே எண்.1411/1

சம்பந்தமாக பாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வேறு சொத்துக்களை சேர்த்தும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

**வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது**

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

R VANJI NATHAN

Digitally signed by R VANJI NATHAN
Date: 2024.01.06 14:02:05 +0530

**Principal District Munsif**
**Vedasandur**